செ.வெ.எண்.47 நாள்: 17.09.2020

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ள வருகை தர உள்ளதால் அதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ள வருகை தர உள்ளதால் அதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் இன்று (17.09.2020) நேரில் ஆய்வு செய்தார். ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன் அவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

பின்னர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

மனித குழத்தை அச்சுறுத்தி ஒரு சுகாதார பேரிடராக மார்ச் 23 சட்டமன்றம் முடிவுற்று அன்றில் இருந்து தொடர்ந்து மாண்புமிகு முதலமச்சர் அவர்கள் தலைமை செயலகத்தில் இருந்து 15 முறைக்கு மேல் காணொலி காட்சி மூலமாக மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் ஆய்வு கூட்டங்கள் நடத்தியுள்ளார். இந்த ஆய்வில் கொரோனா தடுப்பு பணிகள் குறித்தும், மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்தும் கேட்டறிந்து அவைகளை விரைவாக செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழகத்தில்தான் நோய் தாக்கத்தினை கட்டுப்படுத்திட சிறப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் தமிழகத்தில்தான் தான் அதிகமான கொரோனா தொற்று பரிசோதனை மையங்கள் உள்ளன. மேலும் அதிக அளவு பரிசோதனைகள் தமிழகத்தில் தான் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தமிழகத்தில்தான் கொரனோ தொற்று நோயிலிருந்து 86 சதவீதத்திற்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

ஆரம்ப நிலையில் சென்னையில் அதிக அளவு நோய் தொற்று ஏற்பட்ட போது 5 மண்டலங்களாக பிரித்து அதற்கு அமைச்சர்களை கொண்டு உயர்மட்ட குழு அமைத்து செயல்பட்டதன் விளைவாகத்தான் தினசரி மூவாயிரத்திற்கு மேல் இருந்த தொற்றின் அளவு இன்று ஆயிரத்திற்கும் குறைவான நிலையை அடைந்துள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவலை தடுக்க மாவட்ட நிர்வாகம் எடுத்த சீரிய நடவடிக்கைகள் காரணமாகத்தான் தமிழகத்திலே

கொரோனா பாதிப்பில் குறைந்த இறப்பு சதவீத கொண்ட மாவட்டம் என்ற நிலையில் உள்ளது.

இந்த கொரோனா காலத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் நேரிடியாக சென்று ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறார்கள். இந்த கொரோனா நோய் தொற்று காலத்தில் இந்தியாவிலேயே கல பணிக்கு செல்லும் ஒரே முதல்வர் நம் தமிழக முதல்வர் தான் நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் எதிர்கட்சிகளும் அதை ஒப்புப் கொண்டுள்ளனர். திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் உட்பட பல மாவட்டங்களில் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறார்.

நமது மாவட்டத்திலும் தனியாக ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என நமது மாவட்ட மக்களின் சார்பாக நாங்கள் வைத்த கோரிக்கை ஏற்று வருகின்ற 22ந்தேதி நமது மாவட்டத்திற்கு ஆய்வு மேற்கொள்ள வருகை தர உள்ளார்கள். இந்த ஆய்வின்போது கொரோனா தொற்று குறித்தும் மேலும் நமது மாவட்டத்தில் செயல்படுத்துப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்தும் அனைத்து துறை வாரியாக ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்கள் என்பது கூடுதல் சிறப்பாகும்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் மாவட்ட வாரியாக நேரில் சென்று துறை வாரியாக ஆய்வு செய்த வரலாற்றை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படைத்துள்ளார்கள். மேலும் 22ஆம் தேதி நமது மாவட்டத்திற்கு முதல்வர் வருகின்ற பொழுது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களின் தற்போதை நிலை குறித்தும் மேலும் தமிழக முதல்வர் நமது மாவட்டத்திற்கு என்னற்ற திட்டங்களை அறிவித்துள்ளார் அத்திட்டங்களின் நிலை குறித்தும் ஆய்வு நடத்த உள்ளார்கள். இந்த வளர்ச்சி திட்டங்கள் பணிகள் அனைத்தும் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு வர தேவையான அறிவுரைகளை வழங்கவுள்ளார் இந்த ஆய்வுக்கூட்டம் நமது மாவட்ட மக்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அமுதா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு.மோகன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.சீனிவாசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.சங்கரேஸ்வரி, ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.கோபி(எ)அழகிரி மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.